Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நே. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஹூ சித்திரை-மீ உஅ-உ (10—5—34) } No. 24.

## திருமூலர்

திருமூல மாவது செய்ய சவுக்காரம்
திருமூல மாவது செய்ய நற்றுருசு தான்
திருமூல மாகுஞ் செயவண்ட பிண்டந்தான்
திருமூல மூன்றினுட் செய்தவன் மூலனே.

மூன்றே பொருளாய் முடிந்தது அண்டம்
மூன்றே பொருளாய் முடிந்தது பிண்டம்
மூன்றே பொருளாய் முடிந்தது சீவன்
மூன்றே பொருளாய் முடிந்தது வாதமே.

முறையான சூத்திர மேல் வாசலப்பா
மறைவா யிருக்கு மதியமிர் தந்தான்
அறைவாசல் பார்த்தே தெரிந்துள்ளங் கொண்டா
லிறவா திருப்பா ரிறையவ னாமே.

---

# உடலுயிர்ச் சம்பந்தம்

( 21-ம் வாரத்தொடர்ச்சி )

முதற்படியை மிதித்த இடைநட்பாளர் வேண்டிய முன்னிலைப் பொருள்களை வேண்டியவாறே பெற்று அவற்றை நிறை கண்டு பஞ்சீகரணித்துத் தமது தூலத்தை அமலமாக விளைவேறச் செய்யும் ஆற்றல் பெரிதும் உடையராதலால், அவரும் மாயா காரியமாகிய சித்திகளில் மயங்கி மாயா போகங்களில் ஈடுபட்டு அவரோகணம் பெறாது ஆரோகணம் பெறுதற்கேற்ற நற்றவம் விரைந்து செய்ய வேண்டும் என்பார் "நல்வினைமேற் சென்று செய்யப்படும்" என்றார்.

## குறள்

அற்கா வியல்பிற்றுச் செல்வமது பெற்றா
லற்குப வாங்கே செயல்.

(இ-ள்) செல்வம் அற்கா இயல்பிற்று—இந்திர போகமாகிய பெருஞ் செல்வம் மாயாகாரியமாதலின் நிலையில்லாத தன்மையுடையது, அது பெற்றால் ஆங்கே அற்குப செயல்—(ஆதலால்) அச் செல்வம் அரும் பேறாகக்கிடைக்கப்பெற்றால் கிடைத்த அப்போதே நித்தியத்துவம் அடைதற்கேற்ற நல்ல தவத்தைச் செய்து கொள்க என்பது.

இடை நட்பாளர் இந்திரபதம் பெற்றவர்; குபேரர்; கடவுளுக்கு அணுக்கராய் வதிபவர்; ஐந்தையும் அவித்தவர் — அடிமை கொண்டவர்; ஐந்தாகிய ஐயம் ஐயமாகிய பயத்தை வென்றவர். இவரே ஐந்திரர்; அமல முதற்படியில் கால் வைத்தவர்; அமலம் ஆக்கமுறப் பெற்றவர்; பஞ்சதருக்களாகிய காமதேனு, கற்பக விருட்சம், சங்கநிதி, பதுமநிதி சிந்தாமணி என்பனவற்றை உடையவர். (சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிஜாதம் என்பனவே ஐந்தரு எனக் கூறுவாரும் உளர். பஞ்சதருக்கள் என்றபோது அவை எவையாயினும் ஆகுக) இவரே வழியடியார்.

"வானுடர் கோவும் வழியடியார்சாழலோ"
(திருவாசகம் திருச்சாழல் 12)

பௌராணிக இந்திரன் பூலோகப் போலி இந்திரனுவன். அருந்தவத்தால் அமல முதற்படியை மிதித்த வழியடியார் மாயையை நிறைகண்டு பஞ்சீகரணித்து நித்தியத்துவம் அடையும் ஆற்றல் வாய்ந்தவராதலால் அவரோகணமடையார் எனினும், ஒருகால் அம்மாயா போகங்களான் மயங்கி யான் எனது என்னும் முனைப்புற்றால் (சப்தரிஷிகளின் சாபத்தால்) கீழ்ச்சென்ம மடைந்து மீண்டும் எவ்வாற்றானும் படியேற்றம் பெற்று முத்தியடைவர். ஆதலால் நிலையில்லாத அப்பெருஞ் செல்வம் பெற்ற போதே முனைப்புற்று அவரோகணம் பெற்றுப்பிறவியடையாது, அது கொண்டு, ஆரோகணம் பெற்று நித்தியமாகிய முத்தி நிலையைப் பெறுதற்கேற்ற நற்றவம் செய்யவேண்டும் என்பார்.

"அது பெற்றால் அற்குப ஆங்கே
[செயல்"

என்றார்.

## குறள்

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(இ-ள்) உணர்வார்ப் பெறின்—நிலையாமையை உணர்வார் உளராயின் (அவர்க்கு) நாள் என ஒன்று போல் காட்டி ஈரும் வாளது உயிர்—அருவமாகிய காலக் கடவுளானது சூரிய சந்திர உதயாஸ்தமானங்களால் நாள் என்று தன்னை ஒரு பொருள் போலக்காட்டி அணு அணுவாக அறுக்கின்ற அந்நாளாகிய வாளின் வாயின்கண் உள்ளது தம் உயிர் என்பது நன்கு புலப்படும்.

ஈர்தல் எவ்வாறு எனின், தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் என்பனதான் என்று உணர்ந்து ஐம்புலத்தாறு ஓம்பாமையால் உளவாகும் அவச்சலனங்களால் உடம்பிலுள்ள சுத்த அணுக்கள் ஒவ்வொன்றாகக் கெட்டு ஈற்றில் சாதல் ஏற்படுவது என்க.

இருவினையாகிய ஊழ் காலத்தைப் பற்றி நின்றே பக்குவமடைந்து அநுபவமாகும். அண்டமும் பிண்டமும் தம்முள் ஒக்குமாதலால் அண்டத்துள்ள சூரிய சந்திரர் இயக்கத்தால் வேற்றுமை உளதாகிக் காலம் கழிதல் போல, பிண்டத்தும் இடைபிங்கலைகளின் நிறையில்லாத இயக்கத்தால்—உச்சுவாச நிச்சுவாச அளவு நிறை சமம் பெறாது மாறுபடுதலால், அவச்சலனமுண்டாகி அசுத்த நிறை அதிகரித்துச் சாதல் ஏற்படுகின்றது. இவ்வுண்மையை உணர்ந்தவரே காலத்தின் அருமையையும் உணர்ந்து வீழ் நாள் படாமை நற்றவம் புரிந்து உய்தியடைவர். (ஏனைய உலகமாக்கள் தங்களுக்குப் பொழுது போகா நின்றதெனக் களிகூர்ந்து அவச்சலனமடைந்து ஆகாமியங்களை ஈட்டி நாள் என ஒன்றுபோல் காட்டித் தம்மை இடைவிடாது ஈருகின்ற வாளின் வாய்ப்பட்டுச் சாதலடைவர் என்க. ஆதலால் நிலையாமையை உணர்ந்து வீழ் நாள்படாமை நற்றவம் புரியவேண்டும்

என்பதாம். பின்வரும் திருவாக்குக்களும் இதனை நன்கு புலப்படுத்தும்.

காலமுண் டாகவே காதல்செய் துய்மின்
[கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர்
[நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்
[றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து
[முந்துமினே.

(திருவாசகம் திருப்பாண்டிப்பதிகம். 5.)

நாளாநபோகாமே நஞ்சணியுங்
[கண்டனுக்கே
யாளாயவன்புசெய்வோமடநெஞ்சேயர
[னாமங்
கேளாய்நங் கிளைகிளைக்கும் கேடுபடாத்
[திறமருளி
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெரு
[மானே.

(திருஞானசம்பந்தர் தேவாரம் திருக்கோளிலி பண் பழந்தக்க ராகம். 1.)

இடை நட்பாளர்—காலத்தின் அருமையை உணர்ந்து முன் னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்து விரைவில் படியேற்றம் பெற்று உய்தியடைவார் என்பது இக்குறட்பாவால் வலியுறுத்தப்பட்டது.

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

(இ-ள்.) ஒருபொழுதும் வாழ்வது அறியார் — ஒருகணமாயினும் தாம் உயிரோடு கூடி வாழ்தலை அறியும் ஆற்றல் இல்லாதார், கோடியுமல்லபல கருதுப — கோடிக்கணக்கோ அவற்றினும் மிகப்பலவான நினைவுகளை நினைப்பார் என்பது.

இடைநட்பாளர் தாம் நினைத்தவையெல்லாம் முன்னே வந்து நிற்கும் என்பது பற்றி முனைப்பால் இம்மாயா போகங்களை அநுபவிக்குமாறு பல வகையான மனோ சங்கற்பங்களைச் செய்வாராயின், அதனால் தவறுதல் உண்டென்பது இதனால் குறிக்கப்பட்டது. இவ்வாறு சங்கற்பங்களை ஏற்படுத்தாது திருவருளுணர்ச்சியோடுவதிந்து படியேற்றம் பெறவேண்டும் என்பதாம்.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

(இ-ள்.) உடம்போடு உயிரிடை நட்பு—நித்தியத்துவம் அடைதற்குறிய இடை நட்பாளரது உடலுக்கும் உயிருக்கும் உளதாய சம்பந்தம் (அஃதாவது உயிர் அவர் யாக்கையையும் விடுத்து ஓரோவழிப் பிரிந்து செல்வது) புள் குடம்பை தனித்து ஒழியப் பறந்தற்று—பறவையானது தான் முயன்று கட்டியகூடு தனித்துக் கிடப்ப அதனுளிருந்து வெளியே பறந்துபோன தன்மைக்கு ஒப்பாகும் என்பது.

இடைநட்பாளராகிய பிரளயாகலர் தங்கள் பூங்குடலாகிய குடம்பையினின்றும் வெளியேறுவர்; பின்உட்புகுவர். கடைநட்பாளர் உயிர் அவர் அசுத்த உடலைவிட்டுப்பிரிந்த தாயின் பின் உட்புகமாட்டாது; பிறிதோர் யோனி வாய்ப்பட்டுப் பிறக்கும். இடைநட்புக் கைகூடுமாயின் அதுமிகப் பெரியதவப் பயன்என்றே அறிதல் வேண்டும். இதுதான் முதற்படி; மலபரிபாகம் பெற்ற படி. இது ஏகாதசமானதால் பூரணப் பட்டதன்று. மலமாயிருந்தது பரிபாகம் பெற்றதால் அம்மலம் விமலமானது. இதனின்றும் படியேற்றம் பெற்றுழி விமலம் அமலமாகும்—பூரண அமலமாகும் என்பது. பூரணப்படாமையால் பூரணமின்மையைக் குறித்தே இப்படியை மிதித்தவனும் ஒருகால் சாதலடைய்க்கூடும் என்பதேயன்றி வேறன்று. இத்தகைய அருந்தவமுடையான் கீழ் நிறையில் புகத்துணிவானோ? துணியமாட்டான். இவன் குடம்பைக்கு ஒப்பான தனது யாக்கை என்னும் கூட்டோடும் அஞ்ஞான மலிந்த சீவர்களைப்போல உலகில் காணப்படுவான். தனது தூலமாகிய குடம்பையினின்றும் வெளியேறிச் சூக்குமத்தோடும் வதிந்து பின் உட்புகுவன். இது பற்றியே இவன் உடலுக்கும் உயிருக்கும் உளதாகிய இடைநட்பிற்குக் குடம்பைக்கும் புள்ளிற்கும் உளதாகிய நட்பு உவமானமாயிற்று. இவன் ஏக காலத்தில் பலஇடங்களிலும் இருந்து விவகரிப்பன். உலககுருவாய் வதிந்து செயற்கரியன செய்து உலக உபகாரியாய் யாவரும் வியப்படையத்தக்க சித்திகளையும், இறந்தோரை எழுப்புதல் என்னும் அரிய பெரிய சித்தியையும் செய்வன். இந்நிலையை அடைந்தவரே தமது புலாலுடலைப் பூங்குடலாக்கிய இடையர். திருவாரூர்ப்பிறந்தார் இவரே. கமலையிற்பிறத்தல்என்பதும்இது. இவர்க்கே தாம் அடியவர் என்பாராய் "திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்றார் தம்பிரான் தோழர்.

(தொடரும்)

## நன்கொடை

"வித்தகம்" எனும் எமது பத்திரிகைக்கு மனமுவந்து நன்கொடையாக ரூபா 3ன்று அளித்த சிலோன் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைத் திருவாளர் சு. திருச்சிற்றம்பல முதலியார் அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் என்றும் உரிமையாகற்பாலது.

[ப—ர்.]

## அறிவிப்பு

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்.

உ

திருவருள் துணை

ம நந்திபதி கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானேடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே
(திருவாசகம்.)

# வித்தகம்

புதுவை,
பவ-ஹு சித்திரை-மீ 28 உ

## விதேக முத்தி சதேக முத்தி

உலகிலுள்ள சமயிகளெல்லாம் சில நூல்களைப் படிப்பதாலும் சில அநுட்டானங்களாலும் இறந்த பின் எளிதில் முத்தியடைந்துவிடலாம் என்றே நம்பியிருக்கின்றனர். கடவுள் வேதம், சைவம் என்பன உலக மாக்களுக்கு என்றும் மறை பொருளாய் இருத்தல் போலவே சீவன்முத்தர் இயல்பும் அவரால் அடையப்படும் முத்தி யிலக்கணமும் என்றும் மறைபொருளே யாகும். இவ்வுண்மைகள் காலந்தோறும் இருடிகள் முனிவர்கள் மெய்யடியார்கள் வாயிலாகவே வெளிப்படுவனவாகும். சமய குரவர் முதலிய தத்துவப்பெரியார் உண்மைச்சைவ முத்தி இன்னது என்பதைத் தம் தம் திருவாக்காலும் அரும் பெரும் செயலாலும் நன்கு புலப்படுத்தி யருளியும், பிற்காலத்தவர் பலர் அச் சமய குரவர் முதலிய சீவன் முத்தர் அருளிய தெய்வத் திருமறைகளால் போதிக்கப்பட்ட உண்மைகளை அறியும்ஆற்றலில்லாது தம் தம் மனப் பான்மையாலும் வித்யா சாமர்த்தியத்தாலும் பல போலிக்கொள்கைகளை நாட்டித் தம்மினும் குறைந்த அறிவுடையார் பலர் தம்மைச் சீவன் முத்தர் எனவும் தமது வாக்கே வேதாகம உண்மை எனவும் நம்பி ஒழுகும்படி செய்து சேத்துப் போவது தான் அரிய பெரிய சைவ சமய முத்தி என்று புறச்சமயிகள் போல உறுதி பண்ணிவிட்டு மாண்டு போயினர். இதனால் சமய குரவர் நாட்டிய உண்மைச் சைவ முத்திநிலை பலர்க்கும் மறைபொருளாகி எவ்வாற்றானும் தூலம் பிணமாகி விழச் செத்துப்போன பின்பு உயிர்முத்தியடைந்துவிடும் என்னும் சோம்பேறித்தனமான மூடக் கொள்கையே நம்மவர் பலர்க்கும் உயரிய வேதாந்த சித்தாந்தமாயிற்று. சமய போதகர்கள் எனப்படுவோரும் பிறரும் சமய குரவரால் நிலைநாட்டப்பட்ட உண்மைச் சைவ முத்தியைக் குறித்து யாதும் கூறுவதில்லை; சில நடைநொடிகளால், இறந்தபின் வீடு கைகூடும் என்றே உபதேசம் செய்து வருவாராயினர். இவ்வாறு உண்மை முத்திஇலக்கணம் யாவர்க்கும் மறை பொருளாயினமை கண்டு சென்ற பிரபவ ஆண்டில், அம்பிகை அருளால் குமார தேவர் இயற்றிய "சுத்த சாதக"த்தை முக்கிய ஆதாரமாகவும் திருவாசகம், தேவாரம் முதலிய திருமறைகளைப் பிரபல பிரமாணமாகவும் கொண்டு "உண்மை முத்தி நிலை" என்னும் கட்டுரைஒன்று எம்மால் எழுதப்பட்டு சுத்த சாதகத்தோடு வெளியிடப்பட்டது. அவற்றைப் படித்தோர் பலர் யாதும் பேசாது மௌனமாக இருந்துவிட்டனர். சிலர் சுத்த சாதகம் கூறிய முத்தியே உண்மைச் சைவமுத்தி என ஒப்புக்கொண்டனர். வேறு சிலர் முன்னொடு பின் முரணுகப் பலபேசிச் சுத்த சாதக நூலாசிரியரையும் "உண்மை முத்தி நிலை" என்னும் கட்டுரையை வெளிப்படுத்திய எம்மையும் இஷ்டம் போல வாயார இகழ்ந்து செத்துப் போவது தான் முத்தி என முடிபு செய்து தமது சிறந்த அறியாமையைப் புலப்படுத்திக் களிகூர்ந்தனர். இன்னும் சிலர் சதேக முத்தி விதேக முத்தி என இரண்டு வகையான முத்தி உள்ளன எனவும், விதேகம் என்பது தேகம் பிணமானபின் உயிர் அதனைப் பிரிந்து முத்தி அடைவது எனவும் கருதுகின்றனர். ஆதலால் தூலத்தோடு மறைதல் என்னும் உண்மை முத்தியின் அருமை பெருமையைக் குறித்து இன்னும் சில கூறப்படுகின்றன.

தூலத்தை அமலமாக்கி அதனோடு மறைந்து அடைதலாகிய உண்மைச் சைவ முத்தி நிலை பலகோடி சென்மநற்றவப்பயன் திரண்டு ஒரு வடிவெடுத்த வித்தகராலன்றி, ஏனையோர் கல்வியில் எத்துணை வல்லபம் படைத்தவரே யாயினும் அவரால் அடைய முடியாததேயாகும். சதேக முத்தி விதேகமுத்தி என இரு வேறு வகை முத்தி உண்டென்பது வித்தகர் வழக்கன்று. விதேகம் சதேகம் என்னும் இரண்டும் பொருளால் ஒன்றேயாம். அசுத்த தேகம் நீங்கி அமல தேகம் பெற்றிருப்பதே—துவிசத்துவம் அடைந்திருப்பதே விதேகம் பெறுவதென்பது. வி—இன்மை—விசேஷம் எனப் பொருள்படும். விதேகம் பெற்றவரே அதனோடு மறைந்து முத்தியடைவர்—சதேக முத்தி யடைவர்—தூலத்தோடு மறைவர் என்பது. அஃதாவது தூலம் அமலமடைந்து சூக்குமமாய் அருள் வடிவாகும்—சத்தி வடிவாகும். அதனைப் பிரியாது

அமலமடைந்த உயிர் சிவமாகும்—சிவாங்கமாகும் என்பது. இதுவே உண்மைச் சைவமுத்தி.

## சுந்தரர் தேவாரம்

“ ..................................
ஊன் உயிர் வேறு செய்தான்
நொடித்தான்மலை யுத்தமனே.”

(ஷை திருநொடித்தான்மலை. 1.)

என்னும் திருவாக்கின் பொருளும் இதுவே. சுத்த சாதகம் கூறிய முத்தியும் இதுவே.

## சுத்த சாதகம்

மேலொருவடிவையெடுத்ததேயாகின்
மேவுமிவ்வுடலிங்கேவீழும்
மேலொருவடிவையெடுத்ததின்றாகின்
மேவுமிவ்வுடலிங்கேவீழா
மேலொருசிவத்தைச்சீவன்சென்றடையு
மேவுமிவ்வுடலிங்குத்தானே
மேலொருசிவத்தின்வடிவதாமருளாய்
வெளியதாமூலகுகண்டிடவே. 19

அருளண்டமாகிலுயிர்பிண்டமாகு
மண்டமுந்தோற்றன்மாத்திரமாய்
அருணின்றதாகிற்பிண்டமுமதுபோ
லாகியேநின்றிடுமண்டம்
அருள்வடிவாகிற்பிண்டமுமுயிரா
யருளிற்றாதான்மியமடையும்
அருளந்தச்சிவத்துக்கங்கமதாகி
யமர்ந்துநின்றிடுநின்றபடியே. 57

உடம்பைவிட்டு—உடம்பு பிணமாக, உயிர் பிரிவது மரணமே யன்றி முத்தி யன்று. விதேக முத்தி என்பது உடம்பு பிணமாக உயிர் பிரிவதைக் குறித்த தன்று; காய மாயம் கழிந்து மாறிப் பிறத்தலாகிய துவிசத்துவத்தையே—சீவன் முத்தி நிலையையே குறித்த தாகும். விதேகம் ஏற்படாமல் சதேக முத்தியாகிய உண்மை முத்தி கைகூடாது. விதேகமாகிய அமல யாக்கை பெற்றவரே சாதலுஞ்சாதலடைந்து அசுத்த தநுவாகிய மருளுடம்பு நீங்கப் பெற்றவரே—மாறப் பெற்றவரே சீவன் முத்தராவர். இவரே உலகு கண்டு போற்ற மறைந்து சதேக முத்தியாகிய உண்மைச் சைவ முத்தி அடைபவராவர். ஏனைய மருளுடம்பினர்—விதேகம் பெருதவர் இறந்து பிறப்பவரே யாவர். செத்துப்போவதும் முத்திதான் எனத் துணிந்த பிற்காலத்தவர் சிலர் விதேகம் சதேகம் என்பன இருவேறு வகை என மயங்கி, விதேக முத்தி என்பது உடம்பு பிணவியலடைய உயிர் அதனைப் பிரிந்து முத்தி யடைவது எனக் கருதினர் போலும்! இதனை நம்பியோர் சிலர் சமய குரவர் முதலிய தத்துவப்பெரியார் அடைந்த சதேக முத்தியையும் மறுக்க முடியாதவராய் உண்மையை நாடி உணராது ஒன்றுக்கு மற்றொன்று மாறாக முரண் பட்ட முத்தி நிலை உண்டு போலும் என மயங்கி, தூலத்தோடு மறைதலும் முத்தி தான் எனவும் தூலம் பிணமாக விழ இறந்து விடுதலும் முத்திதான் எனவும் துணிந்து, எவ்வாற்றானும் இறந்து விடுதலே சிந்தனை சொற் செயல்களுக்குச் சுலபமான முத்தி நெறி என்று சோம்பேறித்தனமாகச் சாதலை எதிர்பார்த்தவர்களாய் வீற்றிருந்து மாண்டுபோயினர்—வீற்றிருப்பாராயினர். முத்தி என்றால் ஒன்றுக்கு மற்றொன்று முற்றாக முரண் பட்ட இருவேறு வகையினதாகுமா? எனவும், இவ்வாறு கொள்ளுதல் இயற்கை விரோதமல்லவா? எனவும், விதியை வென்று—காலனை வென்று அடையப்படும் அரிய பெரிய முத்தி நிலை விதியை வெல்ல முடியாது அவ் விதியின் வசப்பட்டு மரண மடைந்தோரால் அடையப்படுவதொன்றாகுமா? எனவும் ஆய்ந்துணரும் மதிப்பொலிவு இல்லாதார் இவர் என்றே அறிதல் வேண்டும். மரணமும் முத்தி என மயங்குவோரே விதேக முத்தி என்பதற்குத் தேகம் பிணமான பின் உயிர் முத்தி அடைவது என விபரீதப் பொருள் கொள்வர்.

## திருவாசகம்

கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறை [மிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெ [னக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் [மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத் [தும்பீ.

(ஷை—திருக்கோத்தும்பி—9.)

என்று அருளிச் செய்தார் சதேக முத்தியாகிய உண்மை முத்தியடைந்த மணிவாசகப் பிரபு.

இதுகாறும் கூறியவைகளால் அசுத்த மாயா தநு நீங்கப்பெற்றிருத்தலே விதேக முத்தியாகிய சீவன் முத்தி என்பதும், இத் தன்மை வாய்ந்த தத்துவப் பெரியாரே உலகு கண்டு போற்ற மறைந்து சதேகமுத்தியாகிய சைவ சமய முத்தி யடைவார் என்பதும் ஒருவாறுவிளக்கப்பட்டன. விதேக முத்தராகிய சீவன் முத்தர் இயல்பைச் சுத்த சாதகத்துக் கண்டு தெளிக. (செய்யுள் 70 முதல் 81 வரை நோக்குக.)

தற்காலத்தவர் பலராலும் மேதாவி எனப்போற்றப்படும் வடலூர் இராமலிங்க சாமியார் என்பார் சீவன் முத்தர் இயல்பைக் குறித்துக் கூறியனவும் பலர்க்கும் பயன்படுமாறு இங்கே காட்டப்படுகின்றன:—

“பேரின்ப லாபத்தை யடைந்த
“வர் பெருமை யெது வென்றறிய
“வேண்டில், தோல், நரம்பு, என்பு,
“தசை, இரத்தம், சுக்கிலம் முதலிய
“அசுத்த பூத காரியங்களும் அவற்
“றின் காரணங்களாகிய அசுத்த பிர
“கிருதி அணுக்களுமாகிய தேகத்தை
“மாற்றி மாற்று இவ்வளவென்றறியப்
“படாத உயர்ந்த பொன்னாகிய
“சுத்த பூத காரிய தேகத்தையும்,
“பொன்வடிவமாகத் தோற்றுதல்
“மாத்திரமே யன்றி ஆகாயம் போல்
“பரிசிக்கப்படாத சுத்த பூத காரண
“தேகத்தையும் தோன்றப்படுதலு
“மின்றி ஆகாயம் போல் விளங்கு
“கின்ற ஞான தேகத்தையும் பெற்ற
“வர்களாயிருப்பார்கள். உள்ளே
“மண்ணினது திண்மையால் தறிக்கப்
“படார்கள். புறத்தே மண் முதலிய

“வற்றல் எறியினும் அவை அவர்
“வடிவில் தாக்குவனவல்ல. உள்ளே
“நீரினது தண்மையால் குளிரப்படார்
“கள். புறத்தே நீரில் அழுத்தினும்
“அவர் வடிவம் அழுந்தாது. உள்ளே
“நெருப்பினது வெம்மையால் சுடப்
“படார்கள். புறத்தே நெருப்பிற்
“சுடினும் அவர் தேகத்தில் சூடும்
“வடுவும் தோன்றுவனவல்ல.

“உள்ளே காற்றினது ஊக்கத்தால்
“அசைக்கப்படார்கள். புறத்தே
“காற்று அவர் வடிவைப் பரிசித்த
“சைக்கமாட்டாது. உள்ளே ஆகாயத்
“தினது கலப்பினால் அந்தரிக்கப்
“படார்கள். புறத்தே ஆகாயம்
“அவர் தேகத்தை அந்தரிக்கமாட்
“டாது. ஆதாரத்திலன்றி நிராதா
“ரத்திலும் அவர் தேகம் உலாவும்.
“அவரது கண்கள் முதலிய கரணேந்
“திரியங்களும் வாக்கு முதலிய கர்
“மேந்திரியங்களும் பார்த்தல் முத
“லிய விஷயங்களையும் பேசுதல் முத
“லிய விஷயங்களையும்பற்றுவனவல்ல.

“தயையினால் விஷயங்களைப் பற்று
“தல் வேண்டில் சுவர் மலை முதலிய
“தடைகளும் அவர் கண்களை மறைப்
“பனவல்ல. அண்ட பிண்டங்களில்
“அகம் புறம் முதலிய எவ்விடத்து
“முள்ள விடயங்களை அவர் கண்கள்
“இருந்த விடத்திருந்தேகண்டறியும்.
“அண்ட பிண்டங்கள் எவ்விடத்
“திருந்து பேசினும் அவர் செவிகள்
“இருந்தவிடத்திருந்தேகேட்டறியும்.
“எவ்விடத்திருக்கின்ற ரசங்களையும்
“அவர் நா இருந்த விடத்திருந்தே
“சுவைத்தறியும். எவ்விடத்திருக்
“கின்ற பரிசங்களையும் அவர் மெய்
“இருந்த விடத்திருந்தே பரிசித்தறி
“யும் எவ்விடத்திருந்தும் முகந்தறியும்
“எவ்விடத்திலிருக்கின்றவர்களுக்கும்
“அவரது கைகள் இருந்தவிடத்தி
“ருந்தே கொடுத்தல் கூடும். எவ்விடத்
“திலும் அவரது கால்கள் “இருந்த
“விடத்திருந்தே நடத்தல் கூடும். அவ
“ரது வாக்கு எவ்விடத்தி லிருக்கின்ற
“எவ் எவர்களோடும் இருந்த விடத்
“திருந்தே பேசுதல்கூடும். மற்ற இந்
“திரியங்கள்இருந்தவிடத்திருந்தேஎவ்
“விடத்தும் ஆனந்தித்தல் கூடும். அவ
“ரது மனமுதலான கரணங்கள் எப்ப
“டிப்பட்ட விஷயங்களையும் பற்றுவன
“வல்ல. தயவினால் பற்றத் தொடங்
“கில் எல்லா உயிர்களினது எல்லாச்
“சங்கற்ப விகற்பங்களையும் ஒரு நிமி
“டத்தில் ஒருங்கே நினைத்து விசா
ரித்து நிச்சயித்துக்கொள்ளும். அவர்
“அறிவு ஒன்றையும் சுட்டியறியாது.
“தயவினால் சுட்டி யறியத் தொ
“டங்கில், எல்லா அண்டங்களையும்
“எல்லா வுயிர்களையும் எல்லாப் பண்
“புகளையும் எல்லா அநுபவங்களையும்
“எல்லாப் பயன்களையும் ஒருங்கே
“ஒரு நிமிடத்தில் சுட்டியறியும். அவர்
“கள் நிர்க்குணத்தராவார்கள். அல்லது
“சாத்துவிக தாமச இராசத முதலிய
“முக் குணங்களாலும் உள்ளே விகா
“ரப்படார்கள். புறத்தே அவரது
“குணங்கள் கரணங்களைப் பற்றுவன
“வல்ல. உள்ளே பிரகிருதியினால்
“மூடப் படார்கள் புறத்தே அவரது
“பிரகிருதி குணங்களைப் பற்றுவன
“வல்ல. உள்ளே கால தத்துவத்தால்
“வேற்றுமைப் படார்கள். புறத்தே
“காலத்தால் அவரது திருமேனி தடை
“படாது. உள்ளே நியதி அளவால்
“அளக்கப்படார்கள். புறத்தே நிய
“தியால் அவரது திருமேனி அரை
“படாது. அன்றிக் காலம், வித்தை,
“ராகம், புருடன் முதலிய மற்றைய
“தத்துவங்களும் தத்துவ காரியங்க
“ளும் அவர்களுக் கில்லை. மாயையால்
“பேதப்படார்கள். சுத்தமாயையைக்
“கடந்து அதன்மேல் அறிவுருவாக
“விளங்கு வார்கள். ஆகாரம், நித்
“திரை, மைதுனம், பயம் என்பவை
“களால் தடைபடார்கள். அவர்கள்
“தேகத்திற்குச் சாயை, வியர்வை,
“அழுக்கு, நரை, திரை, மூப்பு,
“இறப்பு முதலிய குற்றங்கள் உண்
“டாவனவல்ல. பனி, மழை, இடி,
“வெயில் முதலியவற்றாலும், தேவர்,
“முனிவர், நரகர், மிருகம், பறவை,
“ஊர்வன, தாபரம் என்பவைகளாலும்
“எவ்விடத்தும் எக்காலத்தும் அவர்
“தேகம் வாதிக்கப்படாது. வாள்,
“கத்தி முதலிய கருவிகளாலும் கண்
“டிக்கப்படாது. எல்லா அண்டங்
“களும் அணுக்கள் போலச் சிறிதா
“கத் தோற்றினும், எல்லா அணுக்
“களும் அண்டங்கள் போலப் பெரி
“தாகத் தோற்றினும் அவர் தேகத்
“திற்கு உரித்து. இறந்தோரை எழுப்
“புதல் வார்த்திகரை வாலிபராக்கல்
“முதலிய கரும சித்திகளும் ஞான
“சித்திகளும் அவர் சந்நிதியில்
“விளங்கும்.”

[செங்குந்த மித்திரன்.]

இவற்றால் உண்மை முத்தியாகிய சதேகமுத்தி அடைதற்குரிய சீவன் முத்தரது விமல தேகமாகிய விதேகம்—பூந்துருத்தி—அமல யாக்கை பிணி மூப்புச் சாக்காடுகளுக் கிடமாகிய உலக மாக்களது மருளுடம்பு போன்றதல்ல என்பதும், அதன் அருமை பெருமையும் வெள்ளிடையாகும். மருளுடம்பினர் கல்வி முதலியவற்றால் எத்துணை பெரிய உந்நத நிலையை அடைந்தவரே யாயினும் சிவசுபாவம் நீங்கப் பெறார்—சீவன் முத்தராகார். மருளுடம்புகளாகிய அசுத்த தநுக்களே பூமியுட் புதைக்கும்படியும் கட்டையில் வைத்துச் சுட்டுவிடும்படியும் பிணமாய் விடப்படுவனவாகும். உலகு கண்டு போற்ற மறைந்து சதேக முத்தி யடையாது—தூலத்தோடு மறையாது இறந்தோரை முத்தியடைந்தார் எனக் கருதுவது அறியாமையே! சிவாபராதமே!

தத்துவமசி மகாவாக்கியப் பொருள் அங்கலிங்க ஐக்கியம் எனப்படும் உண்மைச் சைவ முத்தியே யாகும். தத்=அது, சிவம், லிங்கம்; துவம்=நீ, அங்கம் (உடலுயிர்); அசி=ஆனாய், (ஐக்கியம்). உடலுயிர் எனப்பட்ட அங்கம் குருவருளாற் பெற்ற உண்மைச் சாதக அநுஷ்டானத்தால் அமலமடைந்து அதுவாதலே—பிரமமாதலே—சிவமாதலே— சிவாங்கமா

தலே தத்துவமசியின் பொருளாகும்—அதன் உபதேசப் பயனாகும்.

இவ் உண்மை நெறியைக் குருவருளால் உணர்ந்து உண்மைச் சாதகங்களை வழுவறத் தாங்கி ஒழுகி அது ஆனோர் அது ஆவர். பின் அதுவே அதன் பொருளைச் சொல்லும். "அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்" என ஆன்றோரும் கூறினர். பலர் அதுவாகும் நெறியைக் குருவருளால் உணர்ந்து அதுவாகாமல் சில நடைநொடிகளால் அதுவானவர் போலப் பாவனை செய்துகொண்டு முத்தி நெறி என்றும் ஞான விஷயம் என்றும் பாமர சீவர் பக்குவம் நோக்கி உண்மையை மறைத்துச் சில பலவற்றைச் சாத்திரப் பெயர் புனைந்து எழுதிவைத்து இறந்துவிட்டனர்.

அநுபூதிஞானம் சிறிதும் இல்லாத பலர் சிவஞானிகளுடைய ஞானச் சொற்களைக் கொள்ளை கொள்ளையாகக் களவாடிக்கொண்டு அநுபவமுடையார் போல் உண்மை ஞானம் பேசுவதும் மகிழ்வதுமாயுள்ளவர்கள். அவர்களுடைய நிலைமை எத்தன்மைத்தெனின்,

## ஸாமவேத மைத்திரேயோபநிஷத்.

அநுபூதிம் விநாமூடோ வ்ருதா
ப்ரஹ்மணி மோததே |
ப்ரதிபிம்பித சாகாக்ர பலாஸ்வாதந
மோதவத் ||

(இ-ள்.) "மரத்தின் கிளைகளிலிருக்கும் பழங்களின் பிரதிபிம்பங்களைத் தண்ணீரிற் கண்டு அவற்றைத் தின்று மகிழ்வானைப் போல அநுபூதி ஞானமில்லாத மூடன் பிரமத்தின்கண் வாளா மகிழ்கின்றனன்." என்பதையே யொத்த தென்றுணர்க.

ஆயினும் இறந்தோருள்ளும் மேதாவிகள் சிலர் தாம் சிலவகையால் அறிந்த உண்மைகளை—சில அம்சங்களை மறைக்காது தம் அறிவிற் கேற்றவாறு எழுதி வைத்ததும் உண்டு. உண்மை முத்தி யடைந்த தத்துவப் பெரியார் தமது அநுஷ்டானங்களைச் சாத்திரங்களாக எழுதி வைக்கவில்லை. தூலத்தோடு மறைதலே—அங்கலிங்க ஐக்கியமே தத்துவமசி மஹாவாக்கியப் பொருளாகிய உண்மை முத்தி எனவும், அதனை அடைதற்குரிய சாதகங்களைக் குருவருளால் பெறவேண்டும் எனவும் தமது பாடல்களில் குறித்தார்களே ஒழிய, தாம் கைக்கொண்டொழுகிய அநுட்டானங்களை எழுதிவைத்தவரல்லர். ஏன் எழுதிவைக்கவில்லை? அவர்கள் அறிவு விளக்கம் இல்லாதவர்களா? எவ்வகையான அநுபவமும் இல்லாதோர் பலர் தத்துவமசியைப்பற்றி முற்றுமுணர்ந்தவர் போல வாலியம் வாலியமாக எழுதி வைத்து விட்டுப் போகவும், உண்மை முத்தியடைந்த தத்துவப் பெரியாரெல்லாம் அதனை அடைதற்குரிய மார்க்கங்களை—அநுட்டானங்களை எழுதிவையாமல் அதனைக் குருவருளால் பெறவேண்டும் என்று ஏன் கூறினர்? உண்மை முத்தியையும் அதனை அடைதற்குரிய சாதகங்களை அநுட்டித்தற் கண்ணே தமக்கு ஏற்பட்ட அநுபவங்களை மாத்திரம் கௌணமாக அமைத்து திருவாசகம், தேவாரம் முதலியனவாக ஏன் அருளிச் செய்து மறைந்தனர்? காரணம் யாது? அவர் அநுட்டானங்களை அறிவதால் உலகம் யாது பயனும் அடைய மாட்டாது என்பதேயாகும். அவரவர் சடபேதம் கர்மபேதத்துக்குரிய சாதக விதிகள் அவரவர்க்கே உரியனவாகும். பக்குவமுடைய ஒவ்வொரு சீவனும் முத்தியடைதற்குரிய வேத கட்டங்கள் அவ்வச் சீவனுக்கே முன்னிலையிற் போதரும் குருநாதனாகிய எப்பெருமானால் உபதேசிக்கப் படுவனவாகும். பண்டைக் காலத்துந்தான் தற்காலத்துந்தான் வேதம் ஆகமம் முதலாக உலகில் வழங்கும் நூல்கள் எல்லாம் சீவர்கள் உண்மைக் குரவனை அடைதற்குரிய பக்குவம் பெறுதற்கேற்றவாறு சில சரியை கிரியைகளையும் உபாசனை முதலியவற்றையுமே விரிவாகவும் தெளிவாகவும் கூறுவனவாகும். உண்மை முத்தியடைதற்கேற்ற தத்துவமசியைக் குறித்துக் கூடமாய் — சமக்கினையாய்ச் சில சொல்லிவிட்டு அதன் உண்மையையும் அதனை அடையும் நெறியையும்—அநுட்டானத்தையும் குருவருளால் பெறவேண்டுமென்றே கூறுவனவாகும். சீவர்கள் உலகில் வழங்கும் சமய நூல்களில் கூறியவாறு பல சென்மங்களில் ஒழுகி மூர்த்தி தலம் தீர்த்தம் என்பனவற்றாலும் விரதாதிகளாலும் புண்ணியம் மிகப் பெற்றுப் பின்னும் மானிட சென்மத்தை அடைந்து செனன மரணப் பீழையை உணர்ந்து வீடு பேற்றின் கண் அவா மீதூரப் பெற்று முத்தியின் இலக்கணத்தையும் அதனை அடையும் நெறியையும் அறியாது இவற்றை அறிவிக்கும் குருநாதன் எங்குளன் என்ற தேட்டம் உளதாகி எவரைக் கண்டாலும் இவர் தாம் எம்மை ஆளவந்த குருநாதரோ என்ற ஆ[illegible]மை மிகுந்து அளவிடற்கரிய பையாப்புற்று உள்ளம் ஊசலாடி நிற்கும் அமையத்திற்றான் கயிலைமுதற்குரவனாகிய சற்குருநாதன் அவர்கள் முன்னிலையில் போந்து அவர்களைச் சோதித்து, அஃதாவது அவர்களை முத்தியடைதற்கேற்ற சாதகங்களை வழுவறத்தாங்கி ஒழுகும் பக்குவமுடையர்களாக்கி, தத்துவமசியின் உண்மைப் பொருளையும் அதனை அடைதற்குரிய சாதகங்களையும் உபதேசித் தருளுவான். வேத கட்டங்களாகிய இச்சாதக விதிகள் சீவர்தோறும் வெவ்வேறாகும். இவ்வுண்மையை பின்வரும் ஞானசம்பந்தர் தேவாரம் நன்கு வலியுறுத்துதல் கண்டு தெளிக:

## ஞானசம்பந்தர்

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதி
மாண்புங்
கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமை
யெந்தை
தாட்பாலவணங்கித்தலைநின்றிவைகேட்க
தக்கார்

(ஷை திருப்பாசுரம்—பண்—கௌசிகம். 4)

ஜீவபேதம் எத்தனை? பக்குவ பேதம் எத்தனை? சடபேதம் எத்தனை? கர்ம பேதம் எத்தனை? இவற்றிற் குரிய சாதக விதிகள்—வேதாகம விதிகள் அளவு படுவனவாகுமா? இவற்றை யெல்லாம் எழுதிவைக்க முடியுமா? இவை உலகில் நூல்களாக—ஏடுகளாக சாத்திரங்களாக வழங்க முடியுமா? முடியாது! முடியாது! இது பற்றியே வேதம் தத்துவமசி அநுட்டானத்தைச் சொல்ல வில்லை—சொல்ல முடியாது என்றது. "பத்தியாலடையும் அங்கலிங்கயிக்கம் பகர்ந்திடு முபநிடமின்றாம்" எனச் சுத்த சாதகம் (செ. 4.) கூறியதும் அறிக.

உபநிசத்து என்பது உபநிடதம் எனவும் உபநிடம் எனவும் வழங்குகின்றது. உபயம் + நேசித்தது = உபநிசத்து என்றாயிற்று. சத்தாகிய உடலும் சித்தாகிய உயிரும் நேசித்தற்குரிய—ஒழிவற ஒன்றி அமலமடைந்து சூக்குமமாய் அருள்வடிவாய்ச் சிவாங்கமாதற்குரிய சாதக விதிகளே—எம்பெருமான் வேதாகம கட்டங்களே உபநிசத்து எனப்பட்டன. இச்சொல் காலக்கிரமத்தில் பலவாறு மருவிப் பலபொருள் கூறப்பட்டு நிற்பினும் அவை யெல்லாம் மேலே கூறிய உண்மைப் பொருளில் அடங்குதல் அறிக. (விரிப்பிற் பெருகும்.) ஒருவன் முத்தி யடைதற்கேற்ற சாதக விதிகளாகிய வேதாகம கட்டங்கள்—உபநிசத்துக்கள் எக்காலத்தும் சமய நூல்களாக உலகில் வழங்க முடியாது என்பதும் அவை எம்பெருமானாகிய சற்குருநாதன் உபதேசத்தாற்றான் அறியப்படுவன என்பதும் பின்வரும் மணிவாசகப் பெருமான் திருவாக்கானும் நன்கு புலப்படும்:

## திருவாசகம்

உலகச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங்
கொட்டாமோ

(ஷை—திருத்தெள்ளேணம். 17.)

உண்மை முத்தி அடைதற்கேற்றதாலம் அமலமடைந்து சூக்குமமாதற் கேற்ற சாதக விதிகள் அமைந்த சமய நூல்கள் அக்காலத்திலும் உளவாயின் "உலகச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரம்" என்று மணிவாசகர் பாடியருளுவாரா? உண்மை இவ்வாறாக, முத்தியின் அருமை பெருமை அறியாது, உலகில் வழங்கும் சில சாத்திரங்களைப் படிப்பதாலும் அவற்றிற் சொல்லிய சில அநுட்டானங்களைக் கைக்கொண்டு சில நடைநொடிகளால் போலிச் சத்துவம் வகித்து—போலி மௌனம் பூண்டு நடித்தலாலும், பிணிமூப்புக்களால் சரீரம் தளர்ந்து பிணமாகி விழுந்தபின்—சேதனம் பூரணப்படாது பின்னமடைந்தபின் இறைவன் திருவடியைக் கண்டு அடைந்து விடலாம்—இரண்டறக்கலந்து விடலாம் எனத்துணிந்து வாதாடிச் சாத்திரங்கள் பல பேசிக் கோத்திரமும் குலமும் பேசிப் பாத்திரம் சிவம் என்று பணிந்து ஒழுக அறியாது உண்மைக்கு மாறாகப் போராடிச் சாதலை எதிர் பார்த்தவர்களாய் வீற்றிருப்போர் மதிப்பொலிவிற்கு என் செய்வது?

இதுகாறும் கூறியவைகளால் உண்மை முத்தி இலக்கணம் இன்னது என்பதும் சதேக முத்தி விதேக முத்தி என இருவேறு வகை இல்லை என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

## விசேஷ விஞ்ஞாபனம்.

மலையாளத்திலிருந்து ஸ்ரீமான் வீ. பாலமேனோன் என்னும் பெயர் பெற்ற ஓர் வயித்தியர் யாழ்ப்பாணம் கரவெட்டி வடக்கு வதிரியில் வந்திருக்கின்றார். இவர் வயித்திய நூலாராய்ச்சியினாலும் அனுபவத்தாலும் சீவகாருண்ணியம் முதவிய நற்குணமெவற்றாலும் மிக விசேஷித்தவர். எவ்வகைப்பட்ட நோய்களையும் மாற்றத் தக்கவர். இதனைத் தற்காலம் பலருமறிந்திருக்கின்றார்கள். ஆதலால் நாமதிகம் விரித்து எழுதவேண்டியதில்லை. பிறவூர்களிலுள்ள நோயாளரும் இதனையறிந்துஇவரிடஞ் சென்று சுகமடைந்து கொள்ளலா மென்பது பற்றியே இதனை வெளிப்படுத்தலாயினேம்.

இங்ஙனம்

நவிண்டில் நகரவாசிகள்.


## "வித்தகம்"

வருட சந்தா விவரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0

மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

## "வித்தகம்"

விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ. 0—8—0

கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்
புதுச்சேரி.


Sandhanam Printing Works, Pondicherry.

Le Gérant, R.Nagarattinam